Malaysia Nanban, pg 1 & 13, 27 Ogos 2020



வான் அஹ்மட் ஃபேசால்

கோலாலம்பூர், ஆக. 27-

நாட்டின் வளர்ச்சி, ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியவற்றில் தாய்மொழிப் பள்ளிகளின் பங்களிப்பு குறித்து நாட்டில் மீண்டும் சர்ச்சை எழுப்பப்பட்டு வருகிறது. தாய்மொழிப் பள்ளிகள் படிப்படியாக ஒழிக்கப்படும் என துணை அமைச்சர் ஒருவர் கூறியிருப்பது கடுமையான கண்டனத்திற்கு உட்பட்டுள்ளது.

நாட்டில் தாய்மொழிப் பள்ளிகளின் அழிவை பெர்சத்து கட்சியின் இளைஞரணி தொடர்ந்து ஆதரிக்கும் என இளைஞர்,

பக்கம் 13

# தாய்மொழிப் பள்ளிகள் ஒழிக்கப்படுமாம்

## ஒரு துணை அமைச்சரின் கொக்கரிப்பு

**முதல் பக்கத் தொடர்ச்சி**

## தாய்மொழிப் பள்ளிகள்.....

விளையாட்டுத் துறை துணை அமைச்சர் செனட்டர் வான் அஹ்மட் ஃபேசால் வான் அஹ்மட் கமால் நேற்று கூறியிருந்தார். பெர்சத்து கட்சியின் இளைஞர் அணித் தலைவராக வான் அஹ்மட் ஃபேசால் அண்மையில் நியமனம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு வலுவான தேசிய அடையாளத்தைப் பெற்றுள்ள மாணவர்களை தாய்மொழிப் பள்ளிகள் உருவாக்கவில்லை என்றும் தாய்மொழிப் பள்ளிகள் மூடப்படாது என்ற தேசிய ஒற்றுமைத் துறை அமைச்சர் டத்தோ ஹலிமா சாடிக்கின் கூற்றைத் தாங்கள் முற்றாக நிராகரிப்பதாகவும் அவர் நேற்று ஓர் அறிக்கை வாயிலாகக் கூறினார்.

நேற்று முன் தினம் நாடாளுமன்ற மக்களவையில் அமைச்சர் அவ்வாறு கூறியிருந்தார்.

1961 ஆம் ஆண்டு கல்விச் சட்டத்திற்குப் பதிலாக அறிமுகமான 1996 ஆம் ஆண்டு கல்விச் சட்டமானது, கல்வி அமைச்சர் தன் விருப்பப்படி எந்நேரத்திலும் தாய்மொழிப் பள்ளிகளை மூடுவதற்கான அதிகாரத்தைப் பறித்துக்கொண்டாலும் ஒரு வலுவான தேசிய அடையாளத்தைக் காட்டும் மாணவர்களை உருவாக்கத் தவறியிருக்கும் தாய்மொழிப் பள்ளிகள் குறித்து சாமானிய மக்களிடையே எதிர்மறையான கருத்துகளே நிலவுகின்றன.

மேலும், தாய்மொழிப் பள்ளிகளின் தோற்றம் கூட்டரசு அரசியலமைப்புச் சட்டத்தில் எப்போதும் ஒரு சர்ச்சையாகவே இருந்து வருகிறது என்பதிலும் பலவாறான கருத்துகள் நிலவுகின்றன என்று வான் அஹ்மட் ஃபேசால் தெரிவித்தார்.

தாய்மொழிப் பள்ளிகள் நாட்டின் பல்வேறு இனங்களுக்கிடையே ஐக்கியத்திற்கு இடையூறாக இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா என நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது எழுந்த ஒரு கேள்விக்கு ஹலிமா பதில் கூறினார்.

எனினும், நேரடியான ஒரு பதிலை அவர் கூறாமல் தேசிய ஐக்கியத்தை நிலைநிறுத்துவதற்கு அனைத்து மாணவர்களும் ருக்குன் நெகாராவைப் பின்பற்ற வேண்டும் என்று கூறினார்.

வான் அஹ்மட் ஃபேசால் தன் வாதத்தைத் தொடர்ந்தார். பெரும்பாலான தாய்மொழிப் பள்ளி மாணவர்கள் தங்கள் தாய்மொழியில் மட்டுமே சிறந்து விளங்குகின்றனர் என்று மலேசிய தேசியப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டத்தோ தியோ கோக் சியோங் ஓர் ஆய்வில் கூறியிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய மொழியைக் கற்றுத் தேர்வதற்கான அவசியத்திற்கு இது முரண்பாடாக உள்ளது என்றும் அவர் சொன்னார். பேராசிரியர் தியோ அண்மையில் தேசிய ஒற்றுமை ஆலோசனை மன்றத்தில் நியமனம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓர் உயர்ந்த தேசிய அடையாளத்திற்கு தேசிய மொழியில் சரளமாகப் பேசுவது மட்டும் போதாது. மாறாக, அம்மொழியை நன்கு கற்றுத்தேர்ந்தவராகவும் இருக்க வேண்டும். தாய்மொழிப் பள்ளிகளைச் சேர்ந்த சராசரி மாணவர்கள் இன ரீதியாகப் பிரிக்கப்படும் பள்ளிகளுக்கு ஏற்ப குறிப்பிட்ட இனத்தின் அடையாளத்தை மட்டுமே வெளிப்படுத்த முடிகிறது. ஆகவே, இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் பார்த்தால் சராசரியாக அவர்கள் தேசிய அடையாளத்தையும் கொண்டிருக்கவில்லை, தேசியத் தோற்றத்தை பிரதிபலிக்கவும் இல்லை என துணை அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

பல்வேறு மலாய் - முஸ்லிம் குழுக்கள் தற்போது சட்ட ரீதியில் தாய்மொழிப் பள்ளிகளின் நிலை குறித்து கேள்வி எழுப்பி வருகின்றன.

மலேசியாவில் அதிகமான பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தமிழ் மற்றும் சீனப்பள்ளிகளுக்கு அனுப்ப விரும்புவதால் நாட்டில் தாய்மொழிப் பள்ளிகள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றன.

Akhbar : Malaysia Nanban
Tarikh : 27 Ogos 2020
Muka surat : 1 & 13

Tajuk : **Sekolah vernakular perlu dimansuhkan. Kehendak seorang Timbalan Menteri.**

Ringkasan : Penglibatan sekolah vernakular dalam pembangunan negara dan hal perpaduan menjadi kontroversi di negara baru-baru ini. Kenyataan yang dikeluarkan oleh seorang Timbalan Menteri untuk menghapuskan sekolah vernakular adalah sesuatu yang dibantah dengan sekeras hati. Timbalan Menteri Belia dan Sukan, YB Senator Wan Ahmad Fayhsal Wan Ahmad Kamal berkata Parti Pemuda Bersatu akan terus menyokong penghapusan sekolah vernakular di Malaysia. Beliau juga berkata bahawa beliau membantah kenyataan Menteri Perpaduan Negara, Datuk Halimah Sadique yang mengatakan sekolah vernakular bukan halangan menyemaikan perpaduan dan ia tidak akan dihapus di negara ini. Biarpun Akta Pendidikan 1996 yang menggantikan Akta Pendidikan 1961 telah memansuhkan kuasa budi bicara Menteri Pendidikan untuk menutup sekolah vernakular pada bila-bila masa, sekolah vernakular jelas mendapat persepsi negatif rakyat apabila rata-ratanya gagal menghasilkan murid yang mampu memperlihatkan jati diri nasional yang kental. Selain itu, terdapat banyak pandangan bahawa penubuhannya kekal bercanggah dengan Perlembagaan Persekutuan. Pendukungan simbol dan pengamalan sosiobudaya teras kebangsaan selaras dengan Kontrak Sosial antara lainnya menuntut penguasaan bahasa Melayu yang merupakan ‘bahasa kebangsaan’ kita. Namun pemerhatian menunjukkan ramai lepasan sekolah vernakular hanya mampu memperlihat penguasaan bahasa ibunda masing-masing. Ini disokong data-data kajian ilmiah dan penelitian cendekiawan nasional seperti Prof. Dr Teo Kok Seong dari UKM. Jati diri kebangsaan secara unggul juga memerlukan bukan sahaja kefasihan malah penguasaan bahasa kebangsaan dengan baik. Rata-rata pelajar sekolah vernakular pula hanya mampu mempamerkan jati diri ‘etnik tertentu’ mengikut aliran persekolahan yang dipisah dan terpisah berdasarkan jalur etnisiti. Maka jika dinilai, rata-rata mereka kelihatan tidak nasional atau tidak mencerminkan citra kebangsaan dalam tekad mencapai integrasi nasional.

Maka, dengan hasrat murni untuk mengutuhkan perpaduan negara, ARMADA kekal dengan pendirian bahawa Sekolah Vernakular wajar dimansuhkan secara berperingkat.